

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியம் குருகாட்டூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II 2025 – 2026 கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தினை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நேற்று முன்தினம் (03.12.2025) திறந்து வைத்தார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. இரா.ஐஸ்வர்யா உள்ளனர்.

### தூத்துக்குடி – ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம்

# அங்கமங்கலம் - குருகாட்டூரில் துணை சுகாதார நிலையம்!

## அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்!

தூத்துக்குடி, டிச. 5-

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சி மற்றும் குருகாட்டூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் ஆகியவற்றை மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம் பகவத், தலைமையில் திறந்து வைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து திருச் செந்தூர் - காயாமொழி தாண்டவன்காடு வழியாக வும், திருச்செந்தூர் - நாச ரேத் காயாமொழி, மூலக் கரை வழியாகவும், சாத்தா ன்குளம் - முதலூர், திருவை குண்டம் - மணக்கரை ஆழ் வார்கற்குளம் வழியாகவும், திருவைகுண்டம் - வல்ல நாடு, திருச்செந்தூர் - ஏரல் சிவத்தையாபுரம் வழியாக என மொத்தம் 5 புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளை மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால் நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் கொடி ய சைத்து தொடங்கி வைத்து, ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சியில் 15வது நிதிக் குழு மானியத்திட்டம் 2024-2025 கீழ் ரூ.45 இலட் சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு துணை சுகாதார நிலையத் தினையும், ஆழ்வார்திரு நகரி ஊராட்சி ஒன்றியம் குருகாட்டூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார் பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட் டம் - II 2025-2026 கீழ் ரூ.31.40 இலட்சம் மதிப்பீட் டில் புதிதாக கட்டப்பட் டுள்ள ஊராட்சிமன்ற அலு வலகத்தினையும் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

மேலும், அங்கமங்கலம் ஊராட்சியில் புதிதாக கட் டப்பட்டுள்ள அரசு துணை சுகாதார நிலையத்தில் மக்களை தேடி மருத்துவம் பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களை அமைச் சர் அனிதா ஆர்.ராதாகிருஷ் ணன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. இரா.ஐஸ்வர்யா, திருச்செந் தூர் வருவாய் கோட்டாட் சியர் ரா.கௌதம், திருச் செந்தூர் நகர்மன்ற தலை வர் திருமதி சிவஆனந்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ஒன்றிய அரசு – தமிழ்நாட்டில்

# அனைத்து மாவட்டங்களிலும் 5 ஜி சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதா?

## மக்களவையில் க.செல்வம் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 5 -

நாடாளுமன்ற குளிர்கா லக் கூட்டத்தொடரில் நேற்று நமது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தகவல் தொடர்பு அமைச்சகத் திற்கு பின் வரும் கேள்வி களை எழுப்பினார்.

(அ) தமிழ்நாட்டில் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் (TSPs) 35,655 5G அடிப் படை டிரான்ஸ்ஸீவர் நிலையங்களை (BTS) நிறு வியுள்ளனர். தமிழ்நாட் டில் அனைத்து மாவட்டங் களிலும் 5G சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ள னரா? என்பதை அரசாங் கம் அறிந்திருக்கிறதா?

(ஆ) திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிறுவப் பட்ட 5G BTSகளின் மாவட்ட வாரியான விவ ரங்கள் மற்றும் அந்த மாவட்டங்கள் ஒவ்வொன் றிலும் 5G நெட்வொர்க் கின் கீழ் உள்ள கிராமங்க ளின் எண்ணிக்கை எத் தனை? (இ) மேற்படி மாவட்டங்களின் கிராமப் புற மற்றும் பின்தங்கிய பகுதி களில் 5G இணைப்பு மற்றும் டிஜிட்டல் உள்கட்ட மைப்பை மேம்படுத்துவ தற்கு அரசாங்கம் கூடுதல் நிதி அல்லது தொழில்நுட்ப உதவியை வழங்க அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள் ளதா? (ஈ) தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட 5G பயன் பாட்டு வழக்கு ஆய்வகங்கள் மற்றும் சோதனை படுக்கை களின் விவரங்கள் என்ன?

(உ) காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட் டங்களில் அல்லது அதற்கு அருகாமையில் உள்ள தொடக்கநிலை நிறுவனங் கள் மற்றும் டிஜிட்டல் உள் ளடக்கத்தை ஊக்குவிப் பதற்காக தொடக்க நிலை மற்றும் ஆராய்ச்சி வசதி களை நிறுவுவதற்கு அரசாங் கத்திடம் ஏதேனும் திட்டங் கள் உள்ளதா?

இதற்கு ஒன்றிய அரசு, அளித்துள்ள பதில்கள் வரு மாறு:-

அ) 31.10.2025 நிலவரப்படி தமிழ்நாட்டில் தொலைத் தொடர்பு சேவை வழங்கு நர்கள் (TSP) 37,157 5G அடிப்படை டிரான்ஸ்ஸீவர் நிலையங்களை (BTSகள்) நிறுவியுள்ளனர். மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களி லும் தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களால் 5G சேவைகள் தொடங்கப் பட்டுள்ளன.

(ஆ) தமிழ்நாடு மின்சார விநியோக நிறுவனங்கள் வழங்கிய தகவல்களின் படி, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட் டங்கள் உட்படட தமிழ் நாட்டில் உள்ள 5G BTS களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை இணைப்பு1 இல் வைக்கப்பட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரம் மற் றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் முறையே 224 மற்றும் 231 கிராமங் களில் 5G BTSகள் நிறுவப் பட்டுள்ளன.

(இ) நாடு முழுவதும் 5G இணைப்பு மற்றும் டிஜிட் டல் தொடர்பு உள்கட்ட மைப்பை மேம்படுத்த அர சாங்கம் பல தொழில்நுட்ப மற்றும் நிதி முயற்சிகளை எடுத்துள்ளது. இதில் காஞ்சிபுரம் மற்றும் திரு வண்ணாமலை மாவட்டங் களில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதி கள் அடங்கும். இந்த முயற்சிகளில், பின்வருவன அடங்கும்.

(I) 2022 ஆம் ஆண்டில் 5G மொபைல் சேவைகளுக் கான அலைக்கற்றை ஏலம். (II) சரிசெய்யப்பட்ட மொத்த வருவாய் (AGR), வங்கி உத்தரவாதங்கள் (BGs) மற்றும் வட்டி விகி தங்களை பகுத்தறிவுப்ப டுத்த நிதி சீர்திருத்தங்கள். (III) 2022 மற்றும் அதற்குப் பிறகு ஏலத்தில் வாங்கப் பட்ட அலைக்கற்றைக் கான அலைக்கற்றை பயன் பாட்டுக் கட்டணங்களை நீக்குதல்.



(IV) SACFA (ரேடியோ அதிர்வெண் ஒதுக்கீடுகளுக் கான நிலையான ஆலோச னைக் குழு) அனுமதிக் கான நடைமுறையை எளிமைப்படுத்துதல்.

(V) தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை நிறுவு வதற்கான அனுமதி மற்றும் ROW அனுமதிகளை ஒழுங் குபடுத்துவதற்காக கதிசக்தி சஞ்சார் போர்டல் மற்றும் ROW (வழி உரிமை) விதிகள் தொடங்கப்பட்டன. (VI) சிறிய செல்களை நிறுவுவதற்கும் தொலைத் தொடர்பு பாதையை நிறு வுவதற்கும் தெரு தளபா டங்களைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடு அனுமதி. (VII) மொபைல் சேவை கிடைக் காத கிராமங்களில் 4G மொபைல் சேவையை வழங்க 4G செறிவூட்டல் திட்டம்.

(இ) மற்றும் (ஈ) தொடக்க நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் உள்ள டக்கத்தை ஊக்குவிப்பதற் காக. ஐஐடி மெட்ராஸில் ஒரு 5G சோதனைப் படுக் கையும், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் 7 5G பயன் பாட்டு ஆய்வகங்களும் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஏழு நிறுவனங்கள் திருச்சிராப்பள்ளி தேசிய தொழில்நுட்ப நிறுவனம், வேலூர் தொழில்நுட்ப நிறுவனம், கிண்டி பொறி யியல் கல்லூரி (சென்னை), சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் (சென்னை), மற் றும் SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (செங்கல்பட்டு மாவட் டம்) ஆகியவையாகும். சென்னை, வேலூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங் கள் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணா மலை மாவட் டங்களுக்கு அருகில் உள் ளன என்பதைக் குறிக்கிறது.

மக்களவையில் க.செல் வம் எழுப்பிய துணை கேள்விகள் வருமாறு:

(அ) அனைத்து மாவட் டங்களிலும் 5G தொடங் கப்பட்டுள்ளதாக அமைச்ச கம் கூறியுள்ள நிலையில், காஞ்சிபுரம் மற்றும் செங் கல்பட்டின் கிராமப்புறங்களின் பெரிய பகுதிகள் இன்னும் பலவீன மானவை அல்லது இல்லா தவை என்று தெரிவிக்கின் றன. குறிப்பாக உத்திரமேரூர், வாலாஜா பாத் மற்றும் அச்சரப்பாக் கம், மதுராந்தகம், செய் யூர், திருப்போரூர் ஆகிய தொகுதிகளில் மாணவர் கள், சிறு வணிகங்கள் மற் றும் சேவை வழங்கல் பாதிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டின் இந்த வச தியற்ற கிராமப்புற கிளஸ் டர்களுக்கு அரசாங்கம் ஏதேனும் நடந்து கொண் டிருக்கும் அல்லது வரவி ருக்கும் திட்டங்களின் கீழ் கூடுதல் 5G BTS நிறுவலுக்கு முன்னுரிமை அளிக்குமா, மேலும் மாவட்டங்களில் முழு கிராமப்புற கவ ரேஜை உறுதி செய்வதற் கான காலக்கெடுவை குறிப்பிடுமாறு மாண்பு மிகு. அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்?

(ஆ) தமிழ்நாட்டில் 5G பயன்பாட்டு வழக்கு ஆய் வகங்கள் மற்றும் சோதனை படுக்கைகள் நிறுவப்படு வதை அமைச்சகம் எடுத்து ரைத்துள்ளது. ஆனால் இந்த வசதிகள் எதுவும் காஞ்சிபுரம் மற்றும் செங் கல்பட்டில் அல்லது அதற்கு அருகில் இல்லை. இருப்பி னும் அது ஒரு பெரிய கல்வி மற்றும் மின்னணு உற்பத்தி மையமாக உள்ளது.

தொடக்க நிறுவனங் கள், திறன் மேம்பாடு மற் றும் டிஜிட்டல் உள்ளடக் கத்தை ஊக்குவிப்பதற்காக காஞ்சிபுரம் மற்றும் செங் கல்பட்டு மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து 5G கண்டுபி டிப்பு ஆராய்ச்சி சோதனைப் படுக்கை அல்லது பயன் பாட்டு வழக்கு ஆய்வ கத்தை அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா? அப்படியானால், அத்தகைய திட்டத்தை எப்போது மேற்கொள்ள முடியும்?

இவ்வாறு க.செல்வம் எம்.பி. கேள்வி எழுப்பி னார்.



கொரடாச்சேரியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் மாணவ – மாணவிகளுக்கு மிதிவண்டிகளை பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்டஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி கே.கலைவேந்தன் மற்றும் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உடன் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் சிங்காநல்லூர் பகுதி கழகப் பொறுப்பாளர் சிங்கை மு.சிவா, நீலிக்கோனம்பாளையம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் சிங்கை அன்பு தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இதில் சிங்கை பிரபாகரன், இலக்கிய அணி ஜெயராமன், வட்டச் செயலாளர்கள் செல்வராஜ், முருகானந்தம், மாணவர் அணி பைந்தமிழ், அவைத் தலைவர் கந்தசாமி, சிங்கை சம்பத்குமார், இளைஞர் அணி கார்த்தி, மனோஜ், பாலாஜி, தயாநிதி, கீர்த்திவாசன், முத்துக்குமார், யுகேஷ், தொண்டரணி கார்த்தி, சாந்த மோகன், பிரவீன் உள்பட மகளிர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் – ஒன்றியங்களின் விற்பனை மேலாளர்கள் –

# புதிதாக தெரிவு செய்யப்பட்ட தற்காலிக விற்பனை பிரதிநிதிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம்!

## பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 5-

மாமல்லபுரம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு பால் உற்பத்தியா ளர்கள் கூட்டுறவு இணை யம் மற்றும் ஒன்றியங்களில் உள்ள விற்பனை மேலாளர் கள் மற்றும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட தற்காலிக விற்பனை பிரதிநிதி களுக் கான சிறப்பு பயிற்சி முகாமை 02.12.2025 அன்று பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தொடங்கி வைத்து செயல் பாடுகள் குறித்து கலந்துரை யாடினார்.



பால்வளத்துறை அமைச் சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது : -

ஆவினில் பலவேறு வழி களில் அதற்கான வளர்ச்சிக் காக பணியாற்றிக்கொண்டு இருக்கிறோம். அதில் ஒரு பகுதியாக திறன் மேம் பாட்டு பயிற்சி ஏற்கெனவே களஅளவில் பணியாற்று கின்ற அந்த சிறப்பு அதிகா ரிகள் அத்தனை பேருக்கும் நல்ல பயிற்சியை கொடுத்து அவர்களை களத்தில் பணி யாற்ற வைத்திருக்கின் றோம். “Loan for all“ என்ற திட்டத்தின் மூலம் அனைத்து விவாசாயி களுக் கும் கடன் வழங்கும் திட் டத்தை எங்களால் வெற்றி கரமாக நடத்த முடிகிறது. அதைப் போன்று தற்போது ஆவின் பொருட்களை தமி ழகத்தின் அத்தனை பகுதி களுக்கும் கொண்டு சேர்ப் பதற்காக “Aavin Everywhere and Aavin for all” என்கின்ற ஒரு முழக்க த்தோடு நாங் கள் எல்லா இடங்களில் ஆவின் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு முயற் சியை மேற்கொண்டு இருக் கின்றோம்.

மேலும் விற்பனை வியூ கம், களத்தில் எப்படி பணி யாற்ற வேண்டும் போன்ற வற்றிற்கான இரண்டு நாள் பயிற்சியினை ஏற்பாடு செய்திருக்கி ன்றோம். அப் பயிற்சி அளிப்பதற்கு துறை சார்ந்த அனுபவம் வாய்ந்த வல்லுநர்கள் வருகைபுரிந் துள்ளனர்.

செயலாளர் அவர்களும், மேலாண்மை இயக்குநர் அவர்களும், நானும் இருந்து இப்பயிற்சியை நடத்து கின்றோம். இந்த பயிற்சி நிச்சயமாக இரண்டு நாளும் ஆவின் விற்பனை குழு விற்க்கு மிகவும் பயனுள்ள தாக இருக்கும். இந்த பயிற்சி முகாமை திட்டமிட்டு ஏற்பாடு செய் திருக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைச் செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலா ண்மை இயக் குநர் அ.ஜான் லூயிஸ் மற் றும் துறை சார்ந்த அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

### சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் – ஆண்டிமடம் ஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளியில்

# “தேர்வை வெல்வோம்” வழிகாட்டி வினா - விடை தொகுப்பு கையேடு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்!

அரியலூர், டிச. 5 -

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியத்தில் “சிவசங்கர் அறக்கட்டளை சார்பில்” ஆண்டிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும், 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவ - மாணவிய ருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உத வும் “தேர்வை வெல்வோம்” வழிகாட்டி வினாவிடை தொகுப்பினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

தேர்வுகளை நம்பிக்கையு டன் எதிர்கொண்டு, வெற்றி பெற அன்பார்ந்த மாணவச் செல்வங்களை வாழ்த்தி மேலும், அப்பள்ளியில் பயி லும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் குடிநீர் பாட்டில்களையும் வழங்கி மாணவ, மாணவியர்களிடம் உரையாற்றினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது: -

கடந்த ஆண்டு பன்னிரண் டாம் வகுப்பு பொதுத் தேர் வில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றது.

தற்பொழுது இது மிகப் பெரிய வரலாற்று நிகழ்வாக உள்ளது அரியலூர் மாவட் டம் மாநிலத்தில் முதன்மை யாக வந்துள்ளது கடந்த காலங்களில் பின்தங்கி இருந்த இந்த அரியலூர் மாவட்டம் கல்வியில் முன் னேறி இருப்பது மகிழ்ச்சி யான செய்தியாகும் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர் வில் மாநிலத்தின் முதலிடம் என்பதும் பிளஸ் 2 வில் முதலிடம் என்பது இந்த மாவட்டங்களின் வளர்ச் சியை காட்டுகிறது முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பள்ளிக் கல்வித் துறை அமைச் சர் அன்பில் மகேஷ்பொய்யா மொழி வழிகாட்டுதல்படி இந்த துறை மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

முதன்மை கல்வி அலுவ லர் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிக ளின் ஆசிரியர்கள் முழு உழை ப்பையும் வழங்கி வெற்றி வாய்ப்பை இந்த மாவட்டங் களில் கொடுத்துள்ளார்கள் மாணவ மாணவிகளும் மிகச் சிறப்பான முயற்சி செய்து படித்து கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் மாணவ, மாணவியர்கள் நன்றாக படித்து வெற்றி வாகை சூடவேண்டும்

நமது மாவட்டத்தின் கல் வித்துறை சார்ந்த அத்தனை அதிகாரிகள் ஆசிரியர்களுக் கும் மாணவ செல்வங்களுக் கும் அரியலூர் மாவட்ட மக் களின் சார்பாக எனது நன் றியை தெரிவித்துக் கொள்கி றேன்.

நான் கடந்த 2006-2011 ஆண்டில் ஆண்டிமடம் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த போது “தேர்வை வெல் வோம்” என்ற புத்தகம், கையேடு வழங்கி சிறந்த ஆசி ரியர்களை கொண்டு வழி காட்டி பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு கொடுத் தேன் தொடர்ந்து கல்விக்கு பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளோடு செயல் பட்டு வருகிறேன் அதன் பெயரிலேயே 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர் களுக்கு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்ற எண்ணத் தில் என்னால் முடிந்த அள வில் முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகத் தொகு ப்பை வழங்கி சிறிய அளவி லான எனது பங்களிப்பை அளித்து வருகிறேன் அதே போல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று மாணவ மாணவிகளை சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்து உற்சாகப்படுத்தி வருகிறேன் நான் வழங்கிய கையேடு உங் களுக்கு உதவியாக இருந்தி ருக்கும் எனினும் ஆசிரியர் கள் பங்களிப்பு இதில் முக்கியமானது, மாணவ, மாணவியர்களும் மிகுந்த எச் சரிக்கையுடன் தாய், தந்தை, ஆசிரியர்களின் தியாகத்தை நினைத்து நன்றாக படித்து தேர்வில் வெற்றிபெற வேண் டும், முதலமைச்சர், துணை முதல்வர் சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., ஆலோசனைப்படி கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தலைவாசல் தெற்கு ஒன்றியம் வீரகனூர் பேரூராட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் இனிப்புகளை தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.ஜி. அழகு வேல் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர்ச் செயலாளர் சரவணன் மற்றும் ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.